25th April 1960]

Mosquito nuisance in the City

* 801 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI · } Will the Hon. the
SRI A. A. RASHEED : }
Minister for Revenue be pleased to state—

(*a*) the steps taken by the Government to eradicate the mosquito nuisance in the city of Madras;

(*b*) the steps taken by the Government to get rid of the mosquito troubles in the city's Government Hospitals; and

(*c*) the steps taken by the Government to clean the Cooum river and Buckingham Canal portions so as to avoid these becoming sources for mosquito breeding ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) A statement[a] is placed on the table of the House.

(*b*) The premises of the Government hospitals in the City are kept clean and under hygienic conditions. The mosquito nuisance is not peculiar to the hospitals alone but is common to the City as a whole.

(*c*) The question of flushing the Cooum river and Buckingham Canal so as to make them clean and tidal and the connected problems are under consideration of the High Power Committee constitued by the Government and the Committee's Report is awaited.

SRI S. PAKKIRISAMI PILLAI : கவர்ண்மெண்டு ஜெனரல் ஆஸ்பத்திரி, அதற்குப் பக்கத்தில் இருக்கும்படியான சென்ட்ரல் ஜெயில் இந்த இரண்டு இடங்களிலும் கொசு உபத்திரவம் பொறுக்க முடியாமல் இப்போதும் இருந்துகொண்டு இருக்கிறது. அதற்குக் காரணம் பக்கத்திலுள்ள பக்கிங்ஹாம் கெனால்தான். அது இருப்பதன் விளைவாகத்தான் அங்கே கொசுக்கள் உற்பத்தியாகி பெருகுகின்றன. ஆகவே, நிவர்த்திக்கும் திட்டத்தைப் பற்றிப் பழைய மாதிரி சொல்லி சொல்லிப் பயன் இல்லை. அதைக் கூடிய சீக்கிரமாக முடிவு செய்து கொசு உபத்திரவத்தில் இருந்து நிவாரணம் கொடுக்கும்படியான நடவடிக்கையை மேற்கொள்ள அரசாங்கத்தார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த உபத்திரவம் ஒரு மாதத்திற்கு முன்பு இருந்ததைவிட இப்போது மிகக் குறைந்திருக்கிறது. கானலை சுத்தப்படுத்துவது என்றால் சமுத்திர ஜலத்தை உள்ளே செலுத்தித்தான் செய்ய வேண்டும். சமுத்திரம் பூமியை விடக் கீழே இருக்கிறது. ஆகவே உயர்ந்த அலைகள் வருகிற காலத்தில் தான் அதைச் செய்ய முடியும். இது கொஞ்சம் சிக்கலானது. கமிட்டி அறிக்கையையும் பார்த்துக்கொண்டு செய்யப்படும்.

SRI K. VINAYAKAM : Is it not a fact that in spite of these preventive measures, the Madras mosquitoes have defied the process and have become in fact larger in number as well as in size and, therefore, a greater nuisance in the City ? They are said to be breeding in the extended areas like Kodambakkam and Saidapet where about 9,000 cess-pool pits that are supposed to be cleaned daily are not properly cleaned. Will the Government, therefore, take steps to get the underground drainage system extended to these areas and thus put an end to this mosquito nuisance ?

---

a Printed as Appendix I on page 874 infra.

[25th April 1960

THE HON. SRI M. A. MANICKAVELU : It is not only the Madras mosquitoes that defy, but other mosquitoes also. So, we are finding out new ways of combating this nuisance. We are using new disinfectants that will kill them. So, we go on altering the old and the new methods. About the cess-pool and other things referred to by the hon. Member, special staff has been arranged to look after this work. Mechanical sprayers also have been sanctioned and I think we will be able to bring down the nuisance considerably.

SRI K. ANBAZHAGAN : இப்போது இந்தக் கொசுத் தொல்லையை ஒழிப்பதற்கு மிகப் பெரிய இயந்திரங்கள் இரண்டு வாங்க வேண்டும் என்று நகரசபையார் அரசாங்கத்திடம் உதவி கோரி விண்ணப்பித்துக் கொண்டு இருக்கிறார்களா ? அப்படியென்றால் அந்தத் தொகையை மானியமாக வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த மாதிரி கேட்டிருக்கலாம். நான் கொடுத்த குறிப்பிலேயே மெக்கானிகல் ஸ்ப்ரேயர் கொடுப்பது பற்றிச் சொன்னேன். இது பற்றி அவர்கள் எழுதியிருந்தால் அதன் மேல் என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. தனிக் கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI P. G. MANICKAM : சட்டசபை ஹாஸ்டலில் கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. மேலும் வருகிற விருந்தாளிகள் தனிப்பட்ட ஹோட்டல்களில் தங்கிக்கொண்டு படுகிற தொல்லை கணக்கு வழக்கு இல்லை. ஆகவே எங்கெங்கு அதிகமாகக் கொசுக்கள் இருக்கின்றன என்பதைப் பற்றி உடனடியாகச் சர்வே செய்து அவ்விடங்களிலாவது அதை ஒழிப்பதற்கு தக்க நடவடிக்கையை சர்க்கார் மேற்கொள்ளுவார்களா ? அல்லது கார்ப்பரேஷன் மூலமாகவாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த வேலை தான் செய்யப்பட்டு வருகிறது. ஒரு மாதத்திற்கு முன்பு நானும் கூடக் கொசு வலை கட்டிக்கொண்டுதான் தூங்கினேன். இப்போது கொசு வலையை எடுத்து விட்டேன்.

SRI N. K. PALANISAMI : சென்னை நகரத்தில் கொசுவைப் போக்குவதற்கு சர்க்காரும் கார்ப்பரேஷனும் சேர்ந்து ஒரு திட்டம் தயாரிக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். அந்தத் திட்டத்தின் விவரம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்தக் கமிட்டி ரிபோர்ட் இன்னும் வரவில்லை. அது வந்தபின்தான் முடிவு செய்யப்படும்.

SRI V. K. KOTHANDARAMAN : சுகாதாரத் தொழிலாளர்கள் போதுமான அளவு இல்லாத காரணத்தினால்தான் இந்த உபத்திரவம் ஏற்பட்டு இருக்கிறது. அதற்கு அதிகப்படியான தொழிலாளர்களை நியமித்துக்கொள்ள அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்று கார்ப்பரேஷனிடமிருந்து சர்க்காருக்குக் கடிதம் வந்திருக்கிறதா ? ஆகவே அதை உடனடியாக அங்கீகாரம் செய்து அதிகப்படியான தொழிலாளர்களை நியமிக்க அனுமதிப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த மாதிரித்தான் அதிகப்படியாக நியமிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. கொசு ஒழிக்க 100 தொழிலாளர்களும், சுத்தம் செய்ய 50 தொழிலாளர்களும் நியமிக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

SRI K. ANBAZHAGAN : சென்னை மகப்பேறு நிலையம், ஜெயில் ஆகிய இரண்டு இடத்தில் இருந்தும் சாக்கடை நீர் பக்கிங்ஹாம் கெனாலில் கலந்துவிடப்படுவதனால் தான் கொசுக்கள் வளருகின்றன என்ற காரணத்தினால் அதனை நிறுத்துவதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்ய இருக்கிறது ?

25th April 1960]

THE HON. SRI M. A. MANICKAVELU : கமிட்டி ஒன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அவர்கள் ரிப்போர்ட் செய்தால் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

SRI M. K. SOMASUNDARAM : மஸ்கிடோ எராடிகேஷன் ஸ்கீம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது ? அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ? அது ஆரம்பிக்கப்பட்ட பிறகு எவ்வளவு தூரம் வளர்ந்து இருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மூலக் கேள்வி சென்னையை மட்டும் பொறுத்தது. மஸ்கிடோ எராடிகேஷன் ஸ்கீம் என்பது ராஜ்யம் பூராவும் மலேரியா ஜுர ஒழிப்பு சம்பந்தமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. முதலில் கண்ட்ரோல் ஸ்கீமாக இருந்தது. இப்போது எராடிகேஷன் ஸ்கீமாக இருக்கிறது. அது பெரிய அளவில் மாகாணம் பூராவும் அமுல் செய்யப்பட்டு வருகிறது.

SRI N. MARUDACHALAM : சென்னை நகரசபை சுத்தி செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தப் போவ தாகக் கூறப்படுகிறது. அப்படியே இதர நகரங்களின் தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்தந்த நகரசபைகளி லிருந்து கோரிக்கை வந்தால் அவை அவ்வப்போது யோசிக்கப்படும்.

SRI A. VEDARATHNAM : இந்த மேஜையின்மீது வைக்கப் பட்டிருக்கிற அறிக்கையைப் பார்த்தால் இந்த வேலைகள் சரிவர நடை பெற்றுவந்தால் இங்கே கொசுக்கள் இருக்க நியாயம் இல்லை. ஆனால் கொசுக்கள் அதிகமாக இருப்பதற்குக் காரணம் அந்த வேலைகள் சரிவர நடைபெறவில்லை என்று கருதப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த வேலைகளைச் சரிவர நடைபெறச் செய்யத்தான் கொஞ்சம் அதிகமாக ஆட்களை நியமிக்க உத்தே சித்திருக்கிறது. அதிகமான திட்டம் போடப்பட்டிருக்கிறது. இனிமேல் தான் முடிவு தெரியும்.

SRI S. RANGANATHA MUDALIYAR : May we have the information whether the Entomologist has submitted his report, and if so will the Government place copies of the report on the table of the House ?

THE HON. SRI M. A. MANICKAVELU : It does not arise out of this question. This is only about the nuisance of mosquito. The other mosquito which causes fever is a different thing. Under the Malaria eradication scheme they only concentrate on such mosquitoes that cause fever.

SRI V. K. KOTHANDARAMAN : நான் கேட்டது, இந்த ட்ரெயி னேஜை சுத்தம் செய்வதற்கு மீனியல்ஸை அதிகப்படுத்த வேண்டுமென்று. ஆனால் இந்த ஸ்டேட்மென்டில் சொல்லப்பட்டிருப்பது அது பற்றியல்ல. ஆகவே, அதை அதிகப்படுத்துவதற்கு சர்க்கார் அங்கீகாரம் கொடுக்கவில்லை இதுவரையிலும். ஆகவே அதற்கு வேண்டியது செய்ய ஏற்பாடு செய்யப் படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மஸ்கிட்டோவை ஒழிப்ப தற்கு 100 தொழிலாளர்களும், 50 தொழிலாளர்கள் ட்ரெயினேஜை சுத்தப்படுத்துவதற்காகவுந்தான். உத்திரவு ஒன்றும் வேண்டியதில்லை. பணம்தான் ஜாஸ்தியாக வேண்டும். அது எந்த நிலையில் இருக்கிறது என்று இப்போது சொல்ல முடியாது.

SRI S. RANGANATHA MUDALIYAR : Sir, my question refers to item 6 in the statement placed on the table of the House. Has that report been received by the Government, and if so, can we have copies of that report ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, at this stage I cannot state categorically anything. I do not know whether the report has come. I think if the hon. Member renews his question after the report is received by the Government, we will look into it.

* SRI K. B. S. MANI : சென்னையிலிருக்கிற கொசுக்களுக்கு ஏதாவது விசேஷ பவர் இருக்கிறதா ? அதனால் எந்தெந்த வியாதிகள் வருமென்று ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இங்கு ஜனத்தொகை அதிகம். ஆகவே கொசுக்களுக்கெல்லாம் ஒவர் பீடிங் அதிகமாக இருக்கும்.

Levy of Income-tax on Co-operatives

* 802 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the reasons for not representing to the Central Government to drop the proposed levy of income-tax on co-operatives ?

THE HON. SRI R. VENKATARAMAN : The assumption contained in the question is not correct.

SRI N. K. PALANISAMI : கூட்டுறவு சங்கங்களுக்கு இன்கம் டாக்ஸ் போடுவதால் கூட்டுறவு முறையே பாதிக்கப்படுமாகையால் சர்க்கார் இதைப் போடக் கூடாதென்று மத்திய சர்க்காரை வற்புறுத்தினார்களா ? அப்படியானால் அதன் விவரம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN: அந்த மாதிரி எழுதி அனுப்பியிருக்கிறது.

MR. SPEAKER : Questions Nos. 803 and 805 are postponed as the Hon. Minister is not in the city and Question No. 804 is postponed as the Hon. Minister wants postponement of the question to a later date.

Supply of electricity to villages

* 806 *Q.*—SRI T. K. SUBBIAH : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) தென் சென்னை எலெக்ட்ரிக் கார்ப்பரேஷன்காரர்கள் கடந்த பத்து ஆண்டுகளில் எத்தனை கிராமங்களில் மின்சாரம் விஸ்தரித்தார்கள் ?

(ஆ) உடையார்பாளையம் தாலுக்காவில் எந்தெந்தக் கிராமங்கள் ?

(இ) அவர்கள் திட்டமிட்ட கிராமங்கள் எத்தனை ?

(ஈ) திட்டமிட்டப்படி நிறைவேற்றாத காரணம் என்ன ?

(உ) இனிமேலாவது நிறைவேற்றப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) 258 villages.

(*b*) Ariyalur.
Kilapalur.
Kokkudi.
Keelaiyur.

(*c*) The particulars of the programme for the past years are not available.